# யாழ்நகரிலுள்ள பாடசாலைகளில் நேற்று மாணவர் வரவு மிகக்குறைவாக இருந்தது

யாழ் நகரப்பாடசாலைகளிலும் மாணவர்கள் வரவு மிகமிகக் குறைவாகக் காணப்பட்டது. எனினும் கணிசமான அளவில் ஆசிரியர்கள் வருகை தந்திருந்தனர். யாழ் இந்துக்கல்லூரியில் மொத்தம் 2000 மாணவர்களில் 110 பேரே நேற்றுப் பாடசாலைக்கு சமுகமளித்திருந்தனர். யாழ் இந்துமகளிர் கல்லூரியில் 2150 மாணவர்களில் 25 பேர் மட்டுமே நேற்றுப் பாடசாலைக்கு சமுகமளித்திருந்தனர் சென்ஜோன்ஸ்கல்லூரியில் 1500 மாணவர்களில் 150 பேரும், சென்பற்றிக்ஸ் கல்லூரியில் 2000 மாணவர்களில் 75 பேரும், வேம்படி மகளிர் கல்லூரியில் 2300 மாணவர்களில் 50 பேரும், யாழ் மத்திய கல்லூரியில் 2000 மாணவர்களில் 10 பேரும், சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் 1000 மாணவர்களில் 30 பேரும், கன்னியர்மடம் (ஆங்கிலம்) பாடசாலையில் 1500 மாணவர்களில் 40 பேரும், கன்னியர்மடம் (தமிழ்) வித்தியாலயத்தில் 1500 மாணவர்களில் 15 பேரும்,

— 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா· 3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 245 செவ்வாய் 16-10-1990 (புரட்டாதி 30) ற.அவ்வல் 26

# இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படல் வேண்டும்

## எதிர்க்கட்சிகளும் அரசும் கூடிப்பேசவேண்டும் என்கிறார் அமைச்சர் தொண்டமான்

நாட்டின் இனப்பிரச்சினை ஒரு தேசிய பிரச்சினையாகும். இதனைத் தட்டிக்கழிக்காது எதிர்க்கட்சிகளும், அரசும் கூடிப் பேசித் தீர்க்கவேண்டும் என்று அமைச்சர் தொண்டமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அப்படியான தீர்வுவிரைந்து காணப்படவேண்டும் வடக்கு கிழக்கில் இடம்பெறும்யுத்தம் காரணமாக சாதாரண மக்களே தொடர்ந்தும் பாதிக்கப் படுவார்கள் என்றும் அவர் சொன்னார்.

வடக்குக் கிழக்கு மக்களின் துயர நிலைமைகண்டு யாரும் அக்கறை கொள்ளாதிருப்ப தாகவும் அவர் விமர்சித்துக் கவலை தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசிய போது அமைச்சர் இந்த வேண்டுகோளை விடுத்தார். (11ரு)

## மட்டக்களப்பில் அமைச்சர் மன்சூர்

## தமிழர் பிரச்சினையை சிங்களவர் உணர்ந்துவிட்டனர்

"தமிழர்களின் பிரச்சினைகளைத் தற்போது சிங்களப் பொதுமக்கள் உணர்ந்துள்ளனர். இதனால் இனப்பிரச்சினைக்கான தீர்வை அரசு மேற்கொள்ளும் போது அதற்கான ஆதரவை வழங்க அவர்கள் தயாராகவுள்ளனர்."

இவ்வாறு வர்த்தகக் கப்பல் துறையமைச்சர் ஜனாப் எம். எம். மன்சூர் தெரிவித்துள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## புல்மோட்டை முகாம்மீது ஷெல் தாக்குதல்

திருமலை மாவட்டத்தில் உள்ள புல்மோட்டை இராணுவ முகாம் நோக்கி விடுதலைப் புலிகள் ஷெல் தாக்கு

— 04 ஆம் பக்கம் பார்க்க

## செட்டிகுளம் முகாம் முற்றுகை

வவுனியா மாவட்டத்தில் உள்ள செட்டிகுளம் இலங்கை இராணுவ முகாமிற்குள் ஹெலிகொப்டர்கள் இறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் முகாமைச் சுற்றி காவல் புரிந்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இம் முகாமில் உள்ள இராணுவத்தினருக்கு தேவையான பொருட்கள் ஹெலிகொப்டரிலிருந்து போடப்படுவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

இதேவேளை மாங்குளம்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## பாடசாலைகள் இயங்க ஒத்துழைப்பு வி. பு மக்கள் முன்னணி அறிக்கை

தமிழீழத்தில் இயங்கக் கூடிய பாடசாலைகள் அனைத்தும் செயற்படுவதற்கு நாம் ஒத்துழைப்போம் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

7-ம், 8-ம் வகுப்புகளிற்கு மேல் பாடசாலையில் வகுப்புக்கள் நடைபெறுவதற்கு நாம் தடைவிதித்துள்ளோம் என்ற சில விஷமிகளின் விஷமத்தனமான பிரசாரத்தில் எதுவித உண்மையும் இல்லை.

பாடசாலையில் அகதிகளாக இருக்கும் மக்களுக்கு மாற்று

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வீமன்காமம் பகுதியை நோக்கி பலாலியிலிருந்து நேற்று ஷெல்

கட்டுவன், தெல்லிப்பழை, வீமன்காமம் பகுதிகளை நோக்கி நேற்றுக்காலை 10 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து நான்கு ஷெல்கள் ஏவப்பட்டன.

அதில் வீமன்காமம் ரயிற் பாதை ஓரத்தில் உள்ள ரீ. செல்வராசா என்பவரின் வீட்டில் இரு ஷெல்கள் விழுந்து வெடித்தன. ஒன்று

—04 ஆம் பக்கம் பார்க்க

## புலோலியில் பொம்மர் தாக்குதல்

புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை மீது நேற்றுக்காலை 9.30 மணியளவில் பொம்மர்த்தாக்குதல் இடம் பெற்றது.

இதனால் அங்கு புதிதாக கட்டப்பட்டுவரும் மாடிக்கட்டிடமும் ஏனைய கட்டிடமும் பலத்த சேதமடைந்தன.

பாடசாலையில் இருந்த ஆசிரியர்களும், மாணவர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## கல்லடியில் மோதல் மூன்று பொதுமக்கள் பலி

நேற்று முன்தினம் கல்லடிப் பகுதியில் ரோந்து சென்ற விசேட அதிரடிப்படையினர் மீது புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர். இதனைத் தொடர்ந்து படையினரின் சரமாரியான துப்பாக்கி வேட்டுகளுக்கு மூன்று பொது மக்கள் பலியாகியுள்ளனர்.

இதேவேளை மட்டுநகரில் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான இரு பஸ்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.(து)

## வேலணையிலும் நேற்று...

வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனைமீது நேற்று மாலை 3 மணியளவில் இரு பொம்மர்கள் இரு தடவைகள் குண்டுகளை வீசின.

இதனால் அப்பணிமனைக் கட்டிடம் பலத்த சேதமடைந்தது இச்சம்பவ நேரம் இங்கு முக்கிய கூட்டம் ஒன்று நடைபெற்ற போதிலும் எதுவித உயிர்ச்சேதங்களும் ஏற்பட

—04 ஆம் பக்கம் பார்க்க

## இரணைதீவில் மீனவர் மீது ஹெலி தாக்கி ஒருவர் பலி

நேற்று முன்தினம் இரவு பதினொரு மணியளவில் வலைப்பாட்டுக்கும் - இரணைதீவுக்கும் இடையில் கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்கள் மீது ஹெலிக்கொப்டரில் இருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலின் போது குமார்(30)-குருநகர்,படகிலே

— 04 ஆம் பக்கம் பார்க்க

# மின்மாற்றிகளில் ஒயில் உள்ள பகுதிகளுக்கு இன்று முதல் பகலில் மின்சாரம் கிடைக்கும்

கடந்த மூன்று மாத காலமாக தடைப்பட்டிருந்த யாழ் மாவட்டத்திற்கான மின்சார விநியோகம் இன்று முதல் கிடைக்கவுள்ளது.

கிளிநொச்சிப்பகுதியிலிருந்து கடந்த சில நாட்களாக பரீட்சார்த்தமான முறையில் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகள் வரை வழங்கப்பட்ட மின்சாரம் இன்று முதல் ஏனைய பகுதிகளுக்கும் பகலில் மட்டும் கிடைக்கவுள்ளது. காலை 6 மணி முதல் நண்பகல் 12 மணிவரை சில இடங்களுக்கும், பகல் 12 மணி முதல் மாலை 6 மணி வரை இதர பகுதிகளுக்குமாக மட்டுப்படுத்தப்பட்டு வழங்கப்படும். சில இடங்களில் மின் மாற்றிகளில் ஒயில் திருடப்பட்டுள்ளதால் அந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் கிடைக்க மாட்டாது.

குறிப்பாக யாழ் மாவட்டத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு முழு அளவில் இது கிடைக்கும். இதற்கான திருத்த வேலைகள் நேற்று நடைபெற்றன. (70-66-ரு)

## மக்களுக்குக் கூடுதல் சேவை வழங்கும் வகையில்

# கிராம அலுவலரை அவரது சொந்த ஊர்களுக்கு மாற்றப் புதியதிட்டம்

கிராமசேவை அலுவலர்கள் தத்தமது சொந்த இடங்களுக்கு அண்மையில் கடமையாற்றுவதற்கு வசதி செய்யும் வகையில் புதிய இடமாற்றத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பொது நிர்வாக அமைச்சினால் இது பற்றிய சுற்றுநிருபம் ஒன்று சகல அரசசெயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றுநிருபத்தின் பிரகாரம் கிராமசேவை அலுவலர்கள் தமது வசிப்பிடங்களுக்கு அண்மையில் கடமையாற்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கூடுதலான நேரங்களில் கிராமசேவை அலுவலர் அலுவலகங்கள் திறந்திருப்பதற்காகவும், கிராமசேவையாளர்களுக்கு போக்குவரத்தினால் ஏற்படும் காலதாமதத்தையும் சிரமங்களையும் நிவர்த்தி செய்யவும் கூடுதலான நேரம் கிராமசேவையாளர்கள் மக்களுக்கு சேவையாற்றும் வகையிலும் இந்த வதிவிடத்துக்கு அண்மையில் சேவையாற்றும் திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நாடெங்கிலும் 300 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவையாளர் பிரிவு என்ற அடிப்படையில் புதிய கிராம சேவையாளர் நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கான சுற்று நிருபம் சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டுள்ளது. (33 கி)

## மணியோசை இன்றி துயிலெழும் மண்டைதீவு

மண்டைதீவில் ஆலய'காண்டாமணிகள்' தற்பொழுது ஒய்வெடுக்கின்றன.

இங்குள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் மணியோசையோ, பூசை வழிபாடுகளோ இடம்பெறுவதில்லை. மண்டைதீவுக்கு இராணுவம் வந்தபோது சுமார் 5000 மக்கள் தங்கியிருந்த மிகப் பிரசித்திபெற்ற மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய காண்டாமணி அக்கிராமம் முழுவதற்கும் ஓசை பரப்ப வல்லது. இம்மணி ஓசையிலேயே மண்டைதீவுக் கிராமம் வைகறைத் துயிலெழும். இன்று இக் 'காண்டாமணி'' ஓய்வெடுக்கின்றது. (ப-12கி)

## கிளி. மாவட்ட விவசாயிக்கு கமத்தொழில் மரணபணிக்கொடை

கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் முறையாக விவசாயி ஒருவருக்கு கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்தின்கீழ் மரணப்பணிக்கொடை வழங்கப் படவுள்ளது.

கனகபுரத்தைச் சேர்ந்த பரராஜசேகரன் என்ற இவ் விவசாயி கடந்த ஆண்டு இந்திய இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டினால் மரணமடைந்திருந்தார்.

இவருக்குரிய மரணப்பணிக்கொடையாக ரூபா பத்தாயிரம் வழங்கப்படவுள்ளதாக யாழ் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான பதில் உதவிப் பணிப்பாளர் செ. சிங்கராஜா தெரிவித்தார்.

இத் தொகையுடன் மேலதிகமாக இவ்விவசாயி கமக்காரர் ஒய்வூதியத்திட்ட அங்கத்துவத்திற்காக முதற் தடவை செலுத்திய ரூபா எழுநூற்று அறுபதும் அதற்குரிய வட்டியும் வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எட்டு விவசாயிகளுக்கு மரணப்பணிக்கொடை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (34கி)

## அரச ஊழியர்கள் 55 வயதுக்குமுன் ஓய்வுபெற விசேட ஏற்பாடு

அரச ஊழியர்களுக்கு தமது விருப்பப்படி ஐம்பத்தைந்து வயதுக்கு முன்னரே ஓய்வு பெற வாய்ப்பளிக்கப்படவுள்ளது.

இது சம்பந்தமாக கொழும்பில் உயர்மட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டு, தற்சமயம் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சினால் சுற்று நிருபம் தயார் செய்யப்பட்டு வருகிறது.

இதன்படி சேவைக்காலங்கள் பத்து வருடங்கள், இருபது வருடங்கள், முப்பது வருடங்கள் எனப் பிரிக்கப்பட்டு அவரவர்களின் சேவைக் காலத்திற்கேற்ப ஒய்வூதியக் கொடுப்பனவு கணக்கிடப்படுமெனவும் அறியமுடிகிறது.

இதுவரை காலமும் ஐம்பத்தைந்து வயது வந்தோரே ஒய்வூதியம் பெறமுடியும் அல்லது புதிய ஊழியராயின் (1956-ம் ஆண்டிற்குப் பின்னர் அரச சேவையில் சேர்ந்தோர்) வைத்தியரினால் கடமை செய்யமுடியாதென சிபார்சு செய்யப்பட்டால் மாத்திரமே ஓய்வுபெறச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டன. (ப1-கி)

## குண்டு வீச்சில் இறந்தவரிடம் பணம் அபேஸ்

நேற்று முன்தினம் திருநெல்வேலி சந்தைப் பகுதியில் இடம்பெற்ற பொம்மர்தாக்குதலில் கொல்லப்பட்ட சைமன்சிங்கோ (65) என்ற வியாபாரி பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரென அறியப்பட்டுள்ளது.

தமிழ்ப்பெண்மணியை திருமணம் முடித்து யாழ் பிறவுண் வீதி இரண்டாம் ஒழுங்கையில் மிகவும் வறிய நிலையில் இவர் வசித்து வந்தார்.

சம்பவத்தின் போது இவர் திருநெல்வேலி சந்தையில் எண்ணெய் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தார். பொம்மர் குண்டு பட்டு படுகாயமடைந்து மானிப்பாய் வைத்தியசாலைக்கு இவர் எடுத்துச் செல்லப்பட்ட அதே சமயம் அங்கு நின்ற சிலர் இவர்வசமிருந்த விற்பனைப் பணம் 2000 ரூபாவையும், விற்பனைக்கென வைத்திருந்த 40 லீற்றர் தேங்காய் எண்ணெய், 75 லீற்றர் மண்ணெண்ணை மற்றும் இவரின் சைககிள் வண்டி என்பவற்றை அபகரித்துச் சென்று விட்டதாக அவரின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இவரின் பொக்கட்டில் இருந்த 161 ரூபா 50 சதம் மானிப்பாய் வைத்தியசாலை நிர்வாகத்தினால் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (கி)

## கைவிடப்பட்ட கோண்டாவில் குதம் பிரதான உணவுக்களஞ்சியமாகிறது

கடந்த 8 வருடங்களாகப் பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்த கோண்டாவில் மேற்கில் உள்ள உணவுக் களஞ்சியம் தற்போது பழுது பார்க்கப்பட்டு மீளவும் உணவுக் களஞ்சியமாக உணவுத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்பாதைய சூழ்நிலை காரணமாக கைவிடப்பட்டுள்ள காங்கேசன், பாஷையூர் களஞ்சியங்களுக்குப் பதிலாக இக் களஞ்சியம் பயன்படுத்தப்படுகின்றது

பருத்தித்துறைத் துறைமுகத்தில் இறக்கப்படும் நிவாரணப் பொருட்கள் பல கூட்டுறவுச் சங்க லொறிகள் மூலம் இங்கு எடுத்துவரப்பட்டு களஞ்சியப்படுத்தப்படுகின்றது.

அரிசி, சீனி, மா, சோப், தாவர எண்ணெய் போன்ற பொருட்களும் இங்கு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

இக்களஞ்சியத்தில் இருந்து வலிகாமம் பகுதிக்கு நிவாரணப் பொருட்களை வழங்குவது இலகுவாக இருக்கும் என உணவுத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ப-10 கி)

## கரையோரப் பகுதியில் இருமுனைத் தாக்குதல்

மயிலிட்டி, தையிட்டி, காங்கேசன்துறை, மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை, கீரிமலை ஆகிய பகுதிகளில் தொடர்ந்து சில நாட்களாக பலாலி இராணுவ முகாமிலிருந்தும் கடற்படை பீரங்கிப் படகுகளிலிருந்தும் ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. (ப-30கி)

## மின் உபகரணங்கள் கொள்ளை

மாங்குளம் மின்சாரசபை அலுவலகத்தில் உள்ள பொருட்கள் திருடர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

அங்குள்ள கதிரைகள் மேசைகள், தளபாடங்கள் உட்பட முக்கிய ஆவணங்களும் மற்றும் மின்சார உபகரணங்கள் உதிரிப்பாகங்களும் களவாடப்பட்டுள்ளன.

இவ்வலுவலகம் முகாமிலிருந்து யாழ் வீதியில் ஒரு மைல் தொலையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (38கி)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**செல்வன் வீரசிங்கம் ஜெயந்திரன்**

(முன்னாள் மொறட்டுவைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவனும், யாழ் மாவட்ட கமநலசேவை திணைக்கள தொழில் நுட்ப உத்தியோகத்தரும்)

ஆண்டவன் படைப்பு: 27 - 02 - 1966

அநியாய அழிப்பு: 16 - 10 - 1989

நல்லவர் போற்ற நலம் பெறு பதவியேற்று
நாநிலம் வியக்க வாழ்ந்தாய்
உற்றவர் என்போர் உன்தன்
உயற்சியில் பொறாமை கொண்டோ
தந்திரமாகத் தாக்கி தரணியில் வீழ்த்தினார்கள்.

உன்பிரிவால் வாடும்:

'கோகுலம்'
கண்டி வீதி, கைதடி.

அப்பா, அம்மா,
அக்கா, நண்பர்கள்.

10079

## இடம் மாற்றம்

யாழ் நவீன சந்தையில் இயங்கிவந்த எமது ஓம் ரெக்ஸ் ஸ்தாபனம் தற்பொழுது பருத்தித்துறை வீதியில் இருக்கும் இலங்கைநாயகி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக கல்வியங்காட்டில் அமைந்துள்ளது என்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத் தருகிறோம்.

10090

## மரநாட்டுத் திட்டம் கலந்துரையாடல்

இடம்:- கைலாசபதி அரங்கு

காலம்:- 16- 10- 90 காலை 10. 00 மணி

அழைக்கப்படுவோர்:-

மாநகரசபை ஆணையாளர், நகரசபைச் செயலாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள், பொறுப்பதிகாரிகள், பிரதேசசபைகள் சனசமூக நிலையங்களின் சமாஜ, சம்மேளனங்களின் அங்கத்தவர்கள், சகல சனசமூகநிலையங்களின் தலைவர்கள், செயலாளர்கள், உதவி விவசாயப்பணிப்பாளர், வன இலாகா அதிகாரி,

மற்றும் இதில் ஆர்வமுடைய அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சு. டிவகலாலா
பிராந்திய உள்ளூராட்சி
உதவி ஆணையாளர்,
யாழ். மாவட்டம்.

10088

# சிறிய செய்திகள்

## முல்லைத்தீவுச் சங்கங்களில் பணத் தட்டுப்பாடு

முல்லைத்தீவு மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பணத்தட்டுப்பாடு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக பொருட்களைக் கொள்வனவு செய்வதில் பல தடங்கல்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது.

ஒவ்வொரு ப. நோ. கூட்டுறவுச் சங்கத்திலும் சுமார் ரூபா 15 இலட்சத்திற்கும் கூடுதலான பெறுமதியுடைய காசோலைகள் நிரம்பி வழிவதாகவும் முல்லைத்தீவு, மாங்குளம் ஆகிய பகுதிகளில் வங்கிகள் இயங்காமை காரணமாக இக் காசோலைகளைப் பயன்படுத்த முடியாமல் இருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்ட அரச ஊழியர்களின் காசோலைகள் ப நோ. கூ. சங்கங்களினூடாகவே பணமாக மாற்றப்பட்டு வந்தது. இதன் காரணமாகவே ப நோ. கூ. சங்கங்களில் காசோலைகள் தேங்கிக் கிடக்கின்றன.

இக்காசோலைகளைப் பணமாக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளில் முல்லைத்தீவு அரச அதிபர் ஈடுபட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. 43கி)

## பெறுபேறுகள் இன்னுமில்லை

1989-ம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத்தராதரப் பத்திரச் சாதாரண தரப் பரீட்சைக்குப் பாடசாலை மூலம் தோற்றியவர்களுக்குரிய பெறுபேறுகள் கிடைத்துவிட்ட போதிலும், யாழ் மாவட்டத் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் இன்னமும் கிடைக்கவில்லை. (47கி)

## மீண்டும் பழைய இடத்தில்

மன்னார் நகர உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் மீண்டும் பழைய இடத்தில் இயங்குகிறது.

இம் மாதம் 4-ம் திகதியில் இருந்து இவ் அலுவலகம் மன்னார் நகரப் பகுதியில் இயங்குகிறது அசம்பாவிதங்கள் காரணமாக இந்த அலுவலகம் தாராபுரத்தில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

மன்னார்க் கச்சேரியும்பழைய இடமான மன்னார் நகரப் பகுதிக்கு விரைவில் இடம் மாறும் எனத் தெரிய வருகிறது. (17கி)

## கருணாநிதிக்கு கௌரவ டாக்டர் பட்டம்

நேற்று முன்தினம் எம்.ஜி. ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் தமிழக முதல்வர் கருணாநிதிக்குஅதிகௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கியது.எழுத்தாளராக, கவஞராக, நாடக ஆசிரியராக, பத்திரிகை மற்றும் நாவல் ஆசிரியராக, சிறந்த ஆட்சியாளராக தனக்கென ஓர் இடத்தை இவர் கொண்டிருப்பதினாலேயே இவருக்கு இப் பட்டம் வழங்கப்படுவதாக இப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் குறிப்பிட்டார். (து)

## பீற்றூட் அறுவடை

பீற்றூட்டின் விலை அதிகரித்ததையடுத்து புத்தூர், ஆவரங்கால் பகுதிகளில் விவசாயிகள் அறுவடைசெய்யாது விட்ட பீற்றூட்டுக்களை மீண்டும் அறுவடை செய்வதில் ஆர்வம் காட்டிவருகின்றனர். (கி)

## முறிந்து விழும் நிலையில் மின் கம்பங்கள்

யாழ் மாநகர சபையின் மின் விநியோகப் பகுதிகளிலுள்ள நாயன்மார் கட்டு பாரதி வீதியிலுள்ள மின்கம்பங்கள் அபாயம் ஏற்படக் கூடிய வகையில் சேதமுற்று முறிந்த மின்கம்பிகளின் துணையுடன் தொங்கிக் கொண்டு கிடப்பதை காணக் கூடியதாகவிருக்கிறது.

இப்படிக் கம்பங்கள் தொங்குவதால் வீதியால் செல்லும் பொதுமக்கள் எந்த நேரமும் பயப் பீதியுடன் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம்இருந்து வருகிறது.

மின்சாரம் இல்லாத இவ்வேளையிலும் கூட கம்பங்களையாவது மக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் திருத்தியமைக்கவோ அல்லது அகற்றிவிடவோ மாநகர சபை முயலாது இருப்பது மக்களுக்கு மேலும் மேலும் இடையூறுகளை ஏற்படுத்தும் விதமாக இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (33-கி)

## கிராமிய வங்கிகளில் ஒய்வூதியம் பெறுபவர் திண்டாட்டம்

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கியில் தங்கள் ஜூலை மாதத்திற்கான ஓய்வூதியப் பணத்தைப் பெற முடியாது சுமார் 400 க்கு மேற்பட்ட ஒய்வூதியம் பெறுபவர்கள் திண்டாடுகின்றனர்.

பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல், இளவாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுவோர் கடந்த காலங்களில் இந்தக் கிராமிய வங்கி மூலம் தங்கள் ஒய்வூதியப் பணத்தைப் பெற்றுவந்தனர்.

தற்போது இவ்வங்கியில் பணம் இல்லாத காரணத்தால் கடந்த ஜூலை மாதத்திற்கான ஒய்வூதியப் பணத்தை வழங்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது (13 கி)

## பொருள் இருந்தும் வாங்க முடியா நிலை

அரசாங்க ஊழியர்களும் நிவாரணப் பொருட்களை பணங்கொடுத்து வாங்குவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதும் சம்பளம் கிடைக்காததாலும், சம்பளக காசோலைகள் மாற்ற முடியாததாலும் அதிகமான அரசாங்க ஊழியர்கள் நிவாரணப் பங்கீட்டுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளமுடியாத நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர்.

இப்படிப் பொருள் இருந்தும் பணம் இல்லாது கஷ்டமுறும் அவல நிலை அரச திணைக்கள கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும், அரச ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் அதிகளவில் ஏற்பட்டுள்ளது. (33-கி)

## அகதிகளுக்கு லயன்ஸ் சேவை

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் இப்பகுதியில் வேறு இடங்களிலிருந்து இடம் பெயர்ந்துவந்து அகதிகளாகத் தங்கியிருக்கும் மக்களுக்கு இலவச வைத்திய பரிசோதனை, சிகிச்சை என்பனவற்றை வழங்கியது. கழகத்தின் சித்தன்கேணியிலுள்ள தொழிற்பயிற்சி நிலையக் கட்டிடத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் டாக்டர் ரி. பகீரதன், டாக்டர் அல்போன்சஸ் அத்தனாசியார், டாக்டர் எமில் அத்தனாசியார் ஆகியோர் அகதிகளைப் பரிசோதித்து இலவச சிகிச்சைகளை வழங்கினார்கள். (13கி)

# அடிப்படைச் சமூக ஜனநாயகத்துக்கான உளப் பூர்வமான அரச முயற்சியா?

அல்லது

# அதிகாரச் சதுரங்கத்தின் ‘வெட்டு’ விளையாட்டுக்களில் ஒன்றா?

தற்பொழுது இந்திய மத்திய அரசின் எரி பிரச்சினைகளில் ஒன்றாக மேற்கிளம்பியுள்ள தொழில் ஒதுக்கீட்டுப் பிரேரணை, அதற்கெதிரான எதிர்ப்பியக்கம் ஆகிய இரண்டும் பற்றிய ஒரு வரலாற்று அரசியல் விமர்சனக் குறிப்பு.

எமது அரசியல் விமர்சகர்
**க. மா. இராசையா**
எழுதுவது

ஆயுள் பலத்திற்குச் சவால் விடும் நித்திய கண்டங்களுடன் பிறந்த வி. பி. சிங்கின் தேசிய முன்னணி அரசாங்கம், இப்பொழுது எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று வி. பி. சிங் அவர்களே விடாப்பிடியாக முன்வைத்த மண்டல் கொமிஷன் சிபார்சுகளில் ஒன்றான பின்தங்கிய வகுப்பினருக்கான 27% அரச உத்தியோக ஒதுக்கீட்டினை அமுல் படுத்தலாகும் இந்த ஆலோசனையை தன்னால் அமுல் செய்யமுடியாது போனால் தான் ராஜினாமாச் செய்வதே தவிர எந்தவித விட்டுக்கொடுக்கலுக்கும் இடமளிக்கப் போவதில்லை என்று சூளுரைத்திருந்தார் இந்தியப் பிரதமர். ஆனால் இப்பொழுதோ (9.10.90) எதிர்ப்பியக்கத்தின் முன்னணியில் நிற்கும் மாணவர்களுடன் சொல்லாடலை (Dialogue) மேற்கொள்ளத் தயாராக விருப்பதாகக் கூறியுள்ளார்.

சூத்திரதாரிகள் யார் என்பது திட்டவட்டமாக எடுத்துக் கூறப்படாத இந்த மாணவர் தீக்குளிப்பு நாடகத்தினைச் சற்று உன்னிப்பாக நோக்கும் பொழுது சில முக்கியமான சுவாரசிய அமிசங்களை அவதானித்துக் கொள்ளலாம்.

## அரசியல் ரீதியாக வெளிக்காட்ட முடியாத எதிர்ப்பு

எந்த ஒரு அரசியல் கட்சியும் மண்டல் கொமிஷனின் அரசாங்க உத்தியோகம் பற்றிய சிபார்சினை வெட்ட வெளிச்சமாக மறுதலிக்கவில்லை. அவ்வாறு வழங்கப்படுதல் அவசியம் என்றே சொல்லிக் கொள்ளும் அதேவேளையில் ''மாணவர்களுடன்'' பேச்சு வார்த்தை நடத்தியிருக்க வேண்டுமென்கின்றனர். அரசியல் ரீதியாக வெளிக்காட்டப்பட முடியாத எதிர்ப்பு எவ்வாறு மாணவத் தற்கொலை முயற்சிகளாக முகிழ்த்துள்ளது? ஹரியானாவிலும் பஞ்சாப்பிலும் உத்தரப் பிரதேசத்திலுமுள்ள 18-19 வயது மாணவர்கள் நஞ்சருந்தச் செல்லுமளவுக்கான உத்தேச உந்துதல் எங்கிருந்து வருகிறது?

## தெற்கில் எதிர்ப்பில்லை?

அடுத்தஅமிசம் இந்த எதிர்ப்புப் போராட்டமானது வட இந்தியாவின் பல்வேறு பகுதிகளைப் பாதித்த அளவிற்குத் தென்னிந்தியாவைப் பாதிக்கவில்லை. கர்நாடகத்தின் சில நகரங்கள், ஆந்திராவின் ஹைதராபாத் தவிர்ந்த மற்றைய இடங்களில் குறிப்பாகச் சென்னையில் தொழிலொதுக்கீட்டை வரவேற்று ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றனவே தவிர, டில்லியில் இடம் பெறுவது போன்ற எதிர்ப்புப் பேரணிகள் இல்லை. இந்த நிலைமை எவ்வாறு உண்டாயிற்று.

## பத்து வருஷப் பழைமை

மேலும் இந்த மண்டல் கொமிஷன் அறிக்கை என்பது நேற்று முந்தாநாள் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு விஷயமல்ல.

இந்தக் கொமிஷன் அறிக்கை 1980 முதலே மத்திய அரசின் அலுமாரிகளில் தூசி பிடித்துக் கொண்டிருந்த ஒரு சாதாரண அறிக்கைதான். தேசிய முன்னணி அரசுக்கு முந்திய அரசாங்கங்கள் இந்தக் கமிஷன் சிபார்சுகளை அமுல் செய்ய முன்வரவில்லை. 1980 இல் இவ்வறிக்கை வெளிவந்த பொழுது சுவாரசியமான விவாதம் நடைபெற்றதே தவிர அது அரச நடவடிக்கையாக மேற்கொள்ளப்படவில்லை. அப்படியென்றால், பத்துவருடங்களுக்குப் பிறகு, இப்பொழுது எதற்காக இந்தச் சிபார்சுகளை அமுல் செய்ய அரசாங்கம் கிளம்ப வேண்டும்?

## இதை ஏன் தம் தலையில் போட்டுக்கொண்டார்?

அதுவும், நாளொரு சீவமரணப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் திரு. விஸ்வநாத் பிரதாப் சிங் எதற்காக இந்தப் பிரச்சினையை வலியத் தன் தலைமீது போட்டுக் கொள்ள வேண்டும்? தேவிலால் பிரச்சினை, ராம் ஜென்ம பூமிப் பிரச்சினை, பஞ்சாப் பிரச்சினை ஆகியன போன்று இது பிறரால் கிளப்பப்பட்ட, படும் ஒரு பிரச்சினையல்லவே. வி பி. சிங் ஏன் இப்படிச் செய்து கொண்டார்?

## அரசியற் சாசனத்துக்கு முரணா?

பின்தங்கிய வகுப்பினருக்கான இந்த 27 வீத அரசாங்க உத்தியோக ஒதுக்கீடு எந்த அளவுக்கு ஆட்சியமைப்புக்களை மக்களுக்கு இயைபானது என்பது பற்றித் தீர்மானிக்குமாறு கேட்கப்பட்ட இந்திய சுப்ரீம் கோட் சட்ட இயைபு இயைபின்மை பற்றிக் குறிப்பிடாது (அப்படித்தான் வானொலியிற் கூறப்பட்டது) எதிர்ப்புக்கள் காரணமாகப் பின் போடப்படுவது நல்லது என்று தானே கூறியுள்ளது. அப்படியானால் இந்த 27 வீத ஒதுக்கீடு இந்திய ஆட்சியமைப்புக்கு முரணானதல்லவே.

சுலபமான விடைகளில்லாத இந்த வினாக்களை விளக்கிக் கொள்வதற்கு (இந்த வினாக்களுக்கு விடை அளிப்பதற்கல்ல) முதலில் நாம் பின்வரும் விடயங்கள் பற்றி அறிந்து கொள்வது அவசியமாகின்றது. அந்த விஷயங்களையும் வினா வடிவிலேயே அமைத்துக் கொள்ளலாம்.

## அடிப்படை வினாக்கள்

1. மண்டல் கொமிஷன் அறிக்கை என்பது யாது? அது எதைப் பற்றிய கொமிஷன்? அதன் அறிக்கை ஏன் எவ்வாறு முக்கியமாகின்றது?
2. இந்த உத்தியோக ஒதுக்கீட்டுக்கான எதிர்ப்பியக்கம் ஏன் தென்னிந்தியாவிலும் பார்க்க வட இந்தியாவிலேயே உக்கிரமாகக் காணப்படுகின்றன?
3. தேசிய முன்னணி அரசும் ஜனதா தளமும் சீவமரணப் பிரச்சினைகளை எதிர்நோக்கும் இவ்வேளையில் பிரதமர் வி. பி. சிங் எதற்காக இந்த விடயத்துக்கு முன்னுரிமை கொடுத்தார்?
4. இந்தப் பிரச்சினை இப்பொழுது வளர்ந்து செல்லும் முறைமையில் எவ்வெவ் வகையில் விரியலாம்?

முதலாவது வினாவை முதலில் எடுத்துக் கொள்வோம்.

## நிர்வாக மாற்றம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் பிரித்தானிய ஆட்சி நிலை நிறுத்தப்பட்டு பிரித்தானிய ஆட்சி முறைமை, நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டதும் இந்தியாவில் அதுவரை காலம் எதிர்நோக்கப்படாத இரண்டு விடயங்கள் நடை முறைப்படுத்தப் படலாயின.

முதலாவது இந்தியா முழுவதும் ஒரு அரசாங்கக் கட்டமைப்புக்குள் அதாவது நிர்வாக அமைப்புக்குள் கொண்டு வரப்பட்டது. தப்பியொட்டியிருந்த சமஸ்தானத்து நிர்வாகங்கள் கூட மேலோட்டமான கண்காணிப்பின் கீழ்க்கொண்டு வரப்பட்டன.

## சட்டத்தின் ஆட்சி

அடுத்து, பிரித்தானிய நிர்வாகம் ‘சட்டத்தின் ஆட்சி (Rule of Law) என்றும் அரசியல் நியமத்தை நடைமுறைப் படுத்திற்று. இதன்படிக்கு எந்த ஒரு சட்டமும் ஆள் வித்தியாசம் பாராது நடைமுறைப்படுத்தப்படும் பாரம்பரியமான இந்திய விடயங்கள் சம்பந்தப்படாத மற்றைய ''பொது'' விடயங்களில் இந்தச் சட்டத்தின் ஆட்சி கடைப்பிடிக்கப்பட்டது.

அதிகார அந்தஸ்து வரன்முறை அடிப்படையில் (Hierarchy) அமைந்த இந்திய மரபு வழிச் சமுதாயத்தில் இது பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்திற்று.

(வளரும்)

# உலக அரங்கில்

## ரஷ்யா

ஜனாதிபதி மிகெயில் கொர்பச்சேவ் இவ்வாண்டுக்கான சமாதான நோபல் பரிசைப் பெறவுள்ளார். கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் புரட்சிகர மாற்றங்களை உருவாக்கியமைக்காகவும், வல்லரசுகளுக்கிடையிலான கெடுபிடி யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தமைக்காகவுமே இவருக்குச் சமாதான நோபல் பரிசு கிடைக்கவுள்ளது. கம்யூனிச நாடொன்றின் தலைவர் ஒருவர் நோபல் பரிசைப் பெறுவது இதுவே முதல் தடவை.

## சிங்கப்பூர்

பிரதமர் லீகுவான்யூ தனது 31 வருட கால பிரதமர் பதவியை அடுத்தமாதம் 24-ம் திகதி துறக்கவுள்ளார். புதிய பிரதமராக தற்போதைய துணைப்பிரதமர் கொட்சா தாங் பதவியேற்பார்.

## தென்னாபிரிக்கா

இனஒதுக்கல் சட்டத்தின் முக்கிய பகுதியான ''வெள்ளையர்க்கு மட்டும்'' என்ற பகுதி நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளது. இதற்கான சட்ட மூலம் நேற்று தென்னாபிரிக்க பாராளுமன்றத்தில் நிறைவேறியது. வெள்ளையர் மட்டும் என்ற சட்டத்தின் மூலம் இதுவரை கடற்கரை பூங்கா, ரயில் போன்ற இடங்களில் சில ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு கறுப்பினத்தவர்கள் செல்வது தடை செய்யப்பட்டிருந்தது.

## ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான் கிளர்ச்சியாளர்கள் தமது புதிய தாக்குதல்களை ஆரம்பிப்பது குறித்து நேற்றுப் பாகிஸ்தானில் கூடி ஆராய்ந்தனர். பலம் பொருந்திய கிளர்ச்சிக் குழுவின் தலைவர் அக்பார் சமார் சுட் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் தலைநகர் காபூலில் தாக்குதலை அதிகரிப்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது. (து)

# கடுமையான நோயாளிகளை கொழும்பு அனுப்ப ஏற்பாடு

புற்றுநோய் மற்றும் கடுமையான நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் கப்பல்மூலம் கொழும்புக்கு அனுப்பி சிகிச்சையளிக்கப்படவுள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ் பெரியாஸ்பத்திரியில் இந்த நோய்களுக்கான சிகிச்சை பெற்றுக் கொழும்பு செல்வதற்காக சிபார்சு செய்யப்பட்டவர்களும் அனுப்பப் படவுள்ளனர்.

மிகவும் கடுமையானதும் கட்டாயம் கொழும்பில் காண்பிக்கப்பட வேண்டியவர்களுமான நோயாளர்களும் அனுப்பப்படவுள்ளனர்.

இவர்கள் இம்மாதம் 19ஆம் 21ஆம், 22 ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு தமது விண்ணப்பங்கள் அடங்கிய விபரங்களை நேரிலோ அல்லது நெருங்கிய உறவினர் மூலமாகவோ பணிப்பாளரிடம் கையளிக்குமாறு அவர் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 28 ஆம் திகதி கொழும்பு செல்லும் கப்பலில் இவர்கள் அனுப்பிவைக்கப் படவுள்ளனர். (ப 11 ரூ)

## பண்ணையில் காலை இழந்தார்

குருநகரைச் சேர்ந்த வேஎன் சின்னத்தம்பி நேற்று முன்தினம் பிற்பகல் அளவில் பண்ணை பொலிஸ் விடுதிக்கு அருகாமையில் சென்றபோது தமது வலது காலையிழந்துள்ளார்.

இவர் மானிப்பாய் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகின்றார். ப-11-ரூ

## திருமலையில் கண்ணிவெடி 7 சிப்பாய்கள் பலி

திருமலை மாவட்டத்தில் சூரங்கல் இராணுவ முகாமில் இருந்து கற்குழி இராணுவ முகாமிற்கு இராணுவத்தினர் உழவுயந்திரத்தில் சென்று கொண்டிருந்த போது விடுதலைப் புலிகள் கண்ணி வெடித் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இத் தாக்குதலால் 7 இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இவர்களிடமிருந்து பின்வரும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. எவ்.என்.சி ரக துப்பாக்கி-1, ரி.81 ரக துப்பாக்கி-1 ரவைகள்-300, எஸ்.எம்.ஜீ ரவைக்கூடு-3, ஜே.ஆர் ரக கைக்குண்டு-3, தலைக்கவசம்-1. (71 து)

## வலி வடக்குப் பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும்

ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள வலி-வடக்கு பிரதேசத்திற்கு உட்பட்ட பாடசாலைகள் ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் வரை மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் இப் பிரதேசத்திற்குள் வதியும் ஒரு ஆசிரியர் வேறு பாடசாலையில் கற்பித்தால் அப்பாடசாலைக்கு கடமைக்கு எவ்வாறாயினும் செல்ல வேண்டும் என நேற்றுப் பண்டத்தரிப்பு உதவிக்கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற அதிபர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ப10கி

## யாழ்ப்பாணத்தில் இருந்து பளைக்கு உணவுப்பொருட்கள்

கிளிநொச்சி மாவட்டத்தின் கீழ் உள்ள பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மக்களுக்கு 125 மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் யாழ் மாவட்டத்திலிருந்து அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இங்கு இதுவரை கிளிநொச்சிப்பகுதியில் இருந்து உணவுப்பொருட்கள் கொண்டுவர முடியாத நிலை இருந்ததினாலேயே யாழ்ப்பாணத்தில் இருந்து உணவுப் பொருட்களை அனுப்பிவைக்குமாறு யாழ் அரச அதிபர் திரு அன்ரன் அல்பிறட் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியைக் கேட்டுள்ளார்.

இதன்படி மா 60 மெற்றிக் தொன், அரிசி 40 மெ.தொன் சீனி 20 மெ. தொன், பருப்பு 5 மெற்றி தொன், மண்ணெண்ணெய் 20 பரல் ஆகிய பொருட்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன. (66ரூ)

## காலமானார்
## திருமதி நடராசா பராசக்தி

மூத்ததம்பி நடராசாவின் (கோபாலபிள்ளை ஓய்வு பெற்ற ஆசிரியர் 8-ம் வட்டாரம், புங்குடுதீவு.) அன்பு மனைவி பராசக்தி (சின்னத்தங்கம்) 11 - 10 - 1990 வியாழக்கிழமை அன்று யாழ் திருநெல்வேலி இல.16/1 மணல்தறை லேனில்உள்ள அவரது இல்லத்தில் காலமானார்.

இவர் புங்குடுதீவு 8-ம் வட்டாரத்தை சேர்ந்த முத்தையாவின் அன்பு மகளும் ஆவார். திரு மகாலிங்கம் (கனடா), படியலிங்கம் (இலண்டன்), ஜெயரூபலிங்கம்(இலண்டன), அன்புமகள் ரேணுகாதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி ம ஜான்சி, திருமதி ப. குகனாம்பிகை (ஞானி), திருமதி ஜெ. சுஜி, திரு க. மன்மதராஜா (பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்.) ஆகியோரின் அன்பு மாமியாரும், கரம்பன் திரு மு. ஆறுமுகம், இறைவனடி எய்திய கரம்பன் மு. சதாசிவம், சிவகாமி (தங்கம் திருகோணமலை), அமராவதி (8-ம் வட்டாரம், புங்குடுதீவு), இ. தங்கக்குட்டி (8-ம் வட்டாரம், புங்குடுதீவு.), ப. சேதுப்பிள்ளை (அம்மா 9-ம் வட்டாரம், புங்குடுதீவு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இவரது நல்லடக்கம் 11 - 10 - 1990 அன்று கொக்குவில் மயானத்தில் நடைபெற்றது. இவ் வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(நாட்டின் நிலைமை காரணமாக உடன் அறிவிக்க முடியாததையிட்டு மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.)

இல. 5/1 கனகரட்ணம் றோட்,<br>யாழ்ப்பாணம்.

தகவல்:<br>திரு ப.ஜெயரூபலிங்கம்

10092

## தமிழர்

...ளார். நேற்று மட்டக்களப்பில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சரின் உரையின் போது தமிழரின் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொண்டார். (து

## புல்மோட்டை...

தலைமேற் கொண்டனர். கடந்த சனியன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஏற்பட்ட சேதவிபரம் பற்றி தெரிவிக்கவில்லை (71து)

## வேலணை ..

வில்லை.

இச்சம்பவ நேரம் திரு.எஸ் சுந்தரலிங்கம்(30) என்ற கிராம சேவகரின் வலது காலின் விரல்கள் துண்டிக்கப்பட்டன. (24-ப17ரூ)

## வீமன்காமம்...

அங்குள்ள மாமரத்திலும், மற்றது வீட்டின் முன்பகுதியிலும் விழுந்து வெடித்தது.

மற்றைய இரு ஷெல்களும் வீமன்காமம் டச்சு வீதியிலும், தெல்லிப்பழை தபாற்கந்தோர் பின்புறமும் விழுந்து வெடித்தன. (48-ப 14-10-கி)

## புலோலியில்...

களும் மயிரிழையில் உயிர் தப்பினரார்கள்.

1987 க்கு முன்னரும் இப் பாடசாலை பொம்மர்த் தாக்குதலில் சேதமடைந்து ஆசிய அபிவிருத்திவங்கி உதவியுடன் இம் மாடிக்கட்டிடம் கட்டப்பட்டுவருகிறது. (50ரூ

## யாழ்...

சென் சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் 1400 மாணவர்களில் ஏழுபேரும் மட்டுமே நேற்றுப் பாடசாலைக்கு வந்திருந்தனர்.

நகரின் இந்தப் பதினொரு முக்கியபாடசாலைகளில் நேற்று எடுத்த கணக்கெடுப்பின்படி மொத்தம் 748 ஆசிரியர்களில் 521 பேர் (69. 7 வீதமானோர்) நேற்றுப்பாடசாலைகளுக்குச் சமுகமளித்திருந்தனர்.

மொத்தம் 19350 மாணவர்களுள் 512 பேர் (3 வீதமானோரே) நேற்றுப் பாடசாலைகளுக்கு வந்தனர்.

யாழ் மாவட்டத்தில்உள்ள ஏனைய பாடசாலைகளிலும் இதே நிலையே காணப்பட்டதாகத்தெரிவிக்கப்படுகின்றது. (ப- 25 16, 70கி)

## தலைமன்னார்ப் பகுதியில் கடற்படைப் படகு மீது தாக்குதல் ஒருவர் பலி; ஆயுதங்கள் மீட்பு

தலைமன்னார் கடற் பகுதியில் மீன்பிடிக்கச் சென்று கொண்டிருந்த பொதுமக்களின் மீன்பிடிப்படகு ஒன்றினைப் பிடிப்பதற்கு பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்த கடற்படைப்படகு மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு 10. 30 மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதலில் கடற்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். இவர்கள் சென்ற படகு முற்றாகச் சேதமாக்கப்பட்டது.

இச்சம்பவத்தின் போது ஜே. ஆர் கைக்குண்டு-1, ஏ. கே. மகசீன்-2, எல். எம். ஜீ. லிங்-100 போன்றன கைப்பற்றப்பட்டன. (71-து)

## ஆனையிறவில் மோதல் இராணுவம் பின்வாங்கியது

நேற்றுப் பிற்பகல் 2. 30 மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து வெளியேறி யாழ்குடாநாட்டினை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற் கொண்டனர்.

இதன்பின் இராணுவம் முகாமிற்கு பின்வாங்கிச் சென்றது சேதவிபரம் தெரியவில்லை. (71-து)

## மயிலிட்டி, கட்டுவன் பகுதியில் நேற்று பொம்மர்த் தாக்குதல்

மயிலிட்டிப் பகுதியில் நேற்றுக்காலை இரு பொம்மர்கள் ஆறு குண்டு வீச்சுக்களை நடத்தின. காங்கேசன்துறை கடலில்இருந்தும் கடற்படைப் படகு கரையை நோக்கித் தாக்குதல் நடாத்தியது.

நேற்றுப்பகலும், மாலையும் தெல்லிப்பழை, அளவெட்டி, கட்டுவன், மயிலிட்டிப் பகுதிகளில் ஹெலிகப்டர் மூலம் தாக்குதல் நடாத்தப்பட்டது.

நேற்று மாலை 4. 45 மணியளவிலும் இரு பொம்மர்கள் கட்டுவன் பகுதியில் மூன்று குண்டுகளை வீசின. (ப14,32,48ரூ)

## ஹெலி சூடு

இயக்கச்சிச் சந்தையில் கூடியிருந்த பொதுமக்கள் மீதும் ஆனையிறவு கொம்படி வெட்டையில் சைக்கிளில் வந்த வியாபாரிகள் மீதும் நேற்றுக் காலை ஹெலியிலிருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

நேற்று மாலை கிளாலி கடற்கரையில் மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்ல ஆயத்தமாக நின்றோர் மீது ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டது. (ப 3,ரூ)

## இரணைதீவில்...

பலியானார். அருளப்பு எட்மன் யேசுநாதன்(24)-குருநகர் தலையில்பலத்த காயமடைந்த நிலையில் மானிப்பாய்யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலுமிருவர் கடலில் குதித்து தெய்வாதீனமாக உயிர்தப்பினர். படகும் சேதமடைந்தது. (ப-11ரூ)

## பாடசாலைகள் ..

இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த பின்பு அப் பாடசாலைகளை இயங்கச் செய்யலாம் என மட்டும் நாம் கருத்துத் தெரிவித்துள்ளோம் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (71

## சண்டிலிப்பாயில்

சண்டிலிப்பாயில் உள்ள திரு நா. கணேசபிள்ளை என்பவரின் வீட்டில் இரவு புகுந்த திருடர்கள் அவரது மனைவியின்தும் குழந்தையினதும் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். (30கு(

## மிதிவெடியில் ராணுவம்

மட்டக்களப்புமாவட்டத்தில் உண்ணிச்சைப் பகுதியில் விடுதலைப்புலிகள் வைத்த மிதிவெடியில் சிக்கிய இராணுவத்தினர் இருவர் கால்களை இழந்தனர் (71 து)

## செட்டிகுளம்...

இராணுவ முகாமுக்கு வன்னி இராணுவ முகாமிலிருந்து ஹெலிகொப்டர்கள் மூலம் பெருந்தொகையான துருப்பினர் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (11-கி

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, லக்ஷ்மிபில்டிங்கில் உள்ள அச்சகத்தில் 16-10-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.